தலைமைச் செயலகத்தில் நேற்று (20.02.2025) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் எழுத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், எடையாளர்கள் மற்றும் காவலர்களைப் பணியின் போது பொதுமக்கள் எளிதாக அடையாளம் காணும் வகையில் 4710 பணியாளர்களுக்கு தலா இரண்டு சீருடைகள் வழங்கிடும் அடையாளமாக, 10 பணியாளர்களுக்கு சீருடைகளை வழங்கினார். இந்நிகழ்வில் கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்ய பிரத சாகு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

காஞ்சிபுரம் மாநகரம் 51 வட்டங்களிலும் மார்ச் 1 முதல் 31 ஆம் தேதி வரை

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்விழா கழகக் கொடியேற்றி நல உதவிகள் வழங்கல்!

மாநகரக் கூட்டத்தில் தீர்மானம். மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், பிப், 21- கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு காஞ்சிபுரம் மாநகரம் 51 வட்டங்களிலும் மார்ச் 1 முதல் 31 ஆம் தேதி வரை வட்டங்கள் முழுவதும் கழகக் கொடி ஏற்றி நத்திட்ட உதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடுவோம் என்று காஞ்சிபுரம் மாநகரக் கழகக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாநகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் வட்டம் நேற்று (20,2,2025) காலை 10 மணிக்கு ஏ.கே.ஜி. திருமண மண்டபம் காஞ்சிபுரத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாநகர அவைத் தலைவர் கே.எ.செங்குட்டுவன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

ஏ.எஸ்.முத்துசெல்வம், வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சப்புராயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலார் க.சுந்தர் எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றினார்.

மேலும் இக்கூட்டத்தில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி.,சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், எஸ்.கே.பி.சீனிவாசன், எஸ்.சிகாமணி,ஜி.சுகுமாரன், தி.அன்பழகன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், பெ.சுந்தரவரதன், கே.திலகம்,எஸ்.சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், எஸ்.சுகுமாரன், எஸ்.மாமல்லன், த.விஸ்வநாதன், பி.சங்கர், ப.சரேண், ஜெ.வரதராஜன், எஸ்.சேகர், அ.பாலமுருகன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என தொடர்ந்து நான்காம் தலைமுறையை கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளையொட்டி மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆலோசனைப் படி காஞ்சிபுரம் மாநகர கழகம் 4 பகுதி கழகங்களில் உள்ள 51 வட்ட கழகங்களில் கழக கொடி ஏற்றி கழக கொள்கை பாடல்களை ஒலிக்கவிட்டு இனிப்புகள் வழங்கியும் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்படுவதென தீர்மானிக்கப்படுகிறது.

மாவட்ட கழக செயலாளர் அவர்களின் ஆலோசனைப்படி கழக தலைவரின் பிறந்தநாளை தொடர்ச்சியாக மாநகர கழகத்தில் உள்ள 4 பகுதி கழகங்கள் 51 வட்ட கழகங்கள் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி கழக சார்பு அணிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் என அனைவரின் சார்பாக மார்ச் 1ந் தேதி முதல் மார்ச் 31ந்தேதி வரை தொடர்ச்சியாக 72 இடங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் மற்றும் உணவளிக்கும் விழா என கொண்டாடுவதென தீர்மானிக்கப்படுகிறது.

ஒன்றிய பாசிச பா.ஜ.கவின் தேசிய கல்வி கொள்கை மும்மொழி தினைப்பில் இந்தியை தமிழ்நாட்டில் திணிக்க முயல்வதையும் ஒன்றிய அரசு மாநில அரசுக்கு வழங்க வேண்டிய நிதியையும் நிறுத்தி அதை திமிர்தமாக பேட்டி கொடுக்கும் ஒன்றிய பிரதமர் மோடி ஒன்றிய அமைச்சர்கள் அமித்ஷா, தர்மேந்திர பிரதான் ஆகியோருக்கு கண்டனம் தெரிவித்து மற்றும் இவர்களின் கொட்டத்தை அடக்க பல்முனை போராட்டம் கண்டன கூட்டம் என உடனடியாக ஒன்றிய அரசை எதிர்த்து செயல்படும் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களையும் கழக இளைஞர் அணி செயலளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் இக்கூட்டம் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்துக் கொள்கிறது.

கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு என்ற முழக்கத்தின் ஆணையை ஏற்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் அவர்களின் ஆலோசனைப்படி வரும் சட்டமன்ற தேர்தல் 2026ல் மாநகர கழகத்திற்கு உட்பட்ட காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி, உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதிகளில் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி தொடர்ச்சியாக பெற்று அவ்வெற்றியை தலைவரின் காலடியில் பிறந்தநாள் பரிசாக கொடுக்போம் என தீர்மானிக்கப்படுகிறது.

நம் அனைவரின் எதிர்ப்பை எளிமையாக காட்டும் விதத்தில் கழக தோழர்கள் இல்லம் தோறும் இந்தி எதிர்ப்பு கோலங்கள் வரைந்து காட்ட (பிப் 21) வேண்டும் என தீர்மானிக்கப்படுகின்றது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நெல்லை மாவட்டம், வள்ளியூர் நேரு செவிலியர் கல்லூரியில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் நடத்திய கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான பேச்சுப்போட்டியினை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா மாவட்ட ஊராட்சி மன்ற குழு தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், மாநில ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு உள்பட பலர் உள்ளனர்.

நெல்லை - வள்ளியூரில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் நடத்தும்

கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி!

சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு - வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் - கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் துவக்கி வைத்தனர்!

நெல்லை, பிப். 21– நெல்லை மாவட்டம், வள்ளியூர் நேரு செவிலியர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் நடத்தும் நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டியினை மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, மாவட்ட ஊராட்சி மன்ற குழுத் தலைவர் வி. எஸ்.ஆர்.ஜெகதீஸ், மாநில ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

பின்னர் பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது: –

முதலமைச்சர் அவர்கள் சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி ஆகிய தத்துவங்களின் அடிப்படையில் தான் தமிழ்நாடு பயணிக்க வேண்டும். தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது சமூகத்தின் வளர்ச்சியாக,வாழ்க்கை வளர்ச்சியாக, சிந்தனை வளர்ச்சியாக,பண்பாட்டு வளர்ச்சியாக இருக்க வேண்டும். பொருளாதாரம், கல்வி, சமூகம், சிந்தனை, செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒரு சேர வளர வேண்டும். அதுதான் கனவு காணும் வளர்ச்சி, அதற்கு உங்கள் வழிகாட்டுதல்கள் தேவை என்று கூறியுள்ளார்கள். அதன்படி நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவியர்கள் கல்வியில் தலைசிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக கல்வியில் பல முன்னேற்றங்களை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். பெண் கல்வி, உயர்கல்வியல் இந்தியாவிலே தமிழ்நாடு தான் தலை சிறந்த மாநிலமாக திகழ்ந்து வருகிறது. மாணவ, மாணவியர்கள் அனைவரும் பேச்சுப்போட்டியில் கலந்து கொண்டு தனது பேச்சுத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்று பேச்சுப் போட்டியினை துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்மொழி உலக அளவில் புகழ்பெற்றுள்ளது. இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், கனடா போன்ற 7 நாடுகளில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக உள்ளது. உலகத்தில் மூன்று மொழிகளில் தமிழ் மொழி முதன்மை மொழியாக உள்ளது. பிஷப்கார்டுவெல் அவர்கள் 18 மொழியை காற்று தெரிந்தவர். உலகத்தில் தலை சிறந்த மொழி தமிழ் மொழி என்று எடுத்துரைத்துள்ளார். அவர் தமிழுக்கு ஒப்பிலக்கணம் தந்தவர் அதனால்தான் பிஷப் கார்டுவெல் தமிழறிஞர் பிஷப் கார்டுவெல் என்று போற்றப்பட்டார். பிஷப் கார்டுவெல் நினைவினை போற்றும் விதமாக அவர் வாழ்ந்து மறைந்த இடையன்குடியில் பிஷப் கார்டுவெல் இல்லம் அரசு இல்லமாக முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்டுள்ளது.

நம்முடைய மறைந்த தலைவர்கள் தந்தை பெரியார், கர்மவீரர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் போன்ற தலைவர்கள் தமிழ்நாட்டில் ஆட்சி மொழி எங்கள் தமிழ்மொழி தான் என்றும், அதற்கு அடுத்தபடியாக இரண்டாம் மொழியாக ஆங்கிலம் என்பதால் ஆங்கிலம் கற்று தமிழ் வழியில் கல்வி படித்தவர்கள் விண் வெளிமின் ஆராய்ச்சி போன்ற பல் வேறு துறைகளிலும், அயல் நாட்டில் பல்வேறு உயர் பதவிகளிலும் பணியாற்றி வருகிறார்கள், என்பது மிகப் பெருமைக்குரிய செயலாகும்.

இன்று நடைபெறும் தமிழ் போட்டிக்கான தலைப்புகள் ஒன்றே குலம், ஒருவனே தேவன், மனித நேயம் ஓங்கட்டும், மதவெறி நீங்கட்டும், மக்களாட்சியின் மாண்பும் மதச் சார்பற்ற அரசும், ஏன் வேண்டும் இட ஒதுக்கீடு, இந்திய சமூக நீதி வரலாற்றில் தமிழ்நாட்டின் பங்கு, சதிக்கு கால் முளைத்து சாதியானது, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சமகால ஜனநாயகம் எதிர் கொள்ளும் சவால்கள், விடுதலைப் போரில் தமிழர்களின் பங்கு, தமிழர்களாய் உயர்வோம், தலை நிமிர்ந்து நிற்போம் போன்ற பல்வேறு தலைப்புகளில் மாணவர்களுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு, முதல் மூன்று இடங்களை பிடிக்கும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்த மாணவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசினார்.

நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் செல்வி, டி.டி.என்.கல்வி குழுமத் தலைவர் டி.டி.என். லாரன்ஸ், வள்ளியூர் பேரூராட்சி தலைவர் ராதா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் சாலமன் டேவிட், பாஸ்கர், ஒன்றியச் செயலாளர் ஜோசப்பெல்சி உள்பட ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. நெசவாளர் அணி

வடக்கு மண்டல நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிக்கை!

சென்னை, பிப். 21 - கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. நெசவாளர் அணி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட சென்னை வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, வடகிழக்கு, திருவள்ளூர் மேற்கு, மத்திய, கிழக்கு, காஞ்சிபுரம் வடக்கு, தெற்கு, மாநகரம், தாம்பரம் மாநகரம், கடலூர் கிழக்கு, மேற்கு, விழுப்புரம் வடக்கு, தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், வேலூர், ஆகிய மாவட்ட - மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் 25-2-2025 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில்’ எனது தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஓ.எ.நாகலிங்கம், காஞ்சிபுரம் தி. அன்பழகன் ஆகியோர் வரவேற்புரையாற்றிட, செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப. சச்சிதானந்தம், அருப்புக்கோட்டை க.பழனிசாமி, பரணி கே.மணி, நெல்லை சொ.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன் துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் - வனத்துறை அமைச்சர் பொன்முடி, கழக அமைப்புச் செயலாளர், ஆர்.எஸ். பாரதி தலைமைக் கழக செய்தித் தொடர்பு குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு ஆகியோர் சிறப்புரையாற்று கிறார்கள். கழக த. ரமேஷ், கே.வெங்கட்ராமன் ஆகியோர் நன்றி யுரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் வடக்கு மண்டல நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா;

3. கழக ஆக்கப் பணிகள் - குறித்து.

இவ்வாறு தி.மு.க. நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனத்திற்கு வருகை தரும்

தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!

செஞ்சி, பிப். 21- விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் வழியாக கடலூர் மாவட்டத்திற்குச் செல்லும் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், பொதுமக்கள் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தனது அறிக்கையில் கூறுகையில்கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.2.25, மற்றும் 22.2.25ஆகிய இரு நாட்கள் கடலூர் மாவட்டத்தில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகள், அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் வழியாக கடலூர் மாவட்டத்திற்கு செல்கிறார்.

இன்று 21. 2 .2025 பகல் 10.00 மணிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் வழியாக கடலூர் மாவட்டத்திற்குச் செல்லும் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தலைமையில் திண்டிவனம் புதுச்சேரி செல்லும் வழியில் உள்ள E.Bஅலுவலகம் அருகில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், திமுக மூத்த நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொது மக்கள் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டு முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி ஒலக்கூர் ஒன்றியம் நெய் குப்பி, தாதாபுரம் ஆகிய ஊராட்சிகளில் ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணிவேந்தன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ .முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், ஒன்றிய செயலாளர் ராஜாராமன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை மாநகராட்சி – மாசுகட்டுப்பாடு வாரியம் சார்பில்

நெகிழிப் பயன்பாட்டை விளக்கி மாரத்தான் ஓட்டம்!

தீவுத்திடலில் இன்று நடைபெறுகிறது.!

சென்னை, பிப்.21- தமிழ்நாடு அரசின் உத்தரவின்பேரில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை ஒவ்வொரு மாதமும் நான்காவது சனிக் கிழமை அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணைந்து நெகிழிப்பொருட்களை சேகரித்து அகற்றுதல், நெகிழிப் பொருட்களால் ஏற்படும் சுகாதாரக்கேடுகள் மற்றும் அதற்கு மாற்றாக பயன்படுத்த வேண்டிய பொருட்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தீவிர விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் நெகிழிப் பொருட்கள் சேகரிப்பு மற்றும் நெகிழிப் பயன்பாட்டை குறைப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சென்னை தீவுத்திடலில் 22.02.2025 அன்று காலை. மாணவ மாணவியர்கள், தன்னார்வலர்கள் பங்கேற்புடன் “மாரத்தான் ஓட்டம்” நடைபெறவுள்ளது. மேலும், இராயபுரம், தேனாம்பேட்டை மற்றும் அடையாறு ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் இந்து, கிறிஸ்துவ, முஸ்லீம் வழிபாட்டுத் தலங்களில் நெகிழிப் பொருட்கள் சேகரிக்கும் நிகழ்வுகள் நடத்தப்பட்டு, நெகிழி ஒழிப்பு சம்பந்தமான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்படவுள்ளன.

பொதுமக்கள் மற்றும் வியாபார பெருமக்கள் அனைவரும் அரசால் தடைசெய்யப்பட்ட ஒரு முறை உபயோகப்படுத்தி தூக்கி எறியக்கூடிய நெகிழிப் பொருட்களை பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்த்து, அதற்கு பதிலாக, சுற்றுச்சுழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களை பயன்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது.